# <u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>

**<u>OS.NO.253/2020</u>** **தேதி.04.08.2025**

**இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... வா.சா.2 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2025 ம் ஆண்டு 04.08.2025 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமாறன் | இனம் | ஆண் |
| த/பெ. | கண்ணன் | ஊர்/வட்டம் | கத்தாரிக்குப்பம்/வாலாஜா |
| வயது | 57/2025 | தொழில் | கூலி வேலை |

துவக்க நேரம் 02.50 P.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

நான் இவ்வழக்கில் வாதி. என் தரப்பில் எழுத்துமூலம் சாட்சியம் தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும்., இதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என் தரப்பில் பின்வரும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

| வ. எண் | ஆவணம் | தன்மை | சான்றாவணம் |
|---|---|---|---|
| 1 | கடந்த 22.03.1960 தேதியிட்ட பாஸ்கர ராவ் முனுசாமிக்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட கிரய பத்திரம் | நகல் | வா.த.சா.ஆ.1 |
| 2 | கடந்த 28.04.2015 ல் தாமோதர ராவ் 1 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் | நகல் | வா.த.சா.ஆ.2 |
| 3 | கடந்த 12.03.2020 ல் 1 ம் பிரதிவாதி,2 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரம் | அசல் | வா.த.சா.ஆ.3 |
| 4 | அ பதிவேடு | -- | வா.த.சா.ஆ.4 |
| 5 | 1 ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா | கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது | வா.த.சா.ஆ.5 |

| | | | |
|---|---|---|---|
| 6 | கடந்த 19.08.2020 என் தந்தை பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பு | அலுவலக நகல் | வா.த.சா.ஆ.6 |
| 7 | பிரதிவாதிகள் கையெழுத்து செய்த ஒப்புதல் அஞ்சல் அட்டைகள் | அசல் | வா.த.சா.ஆ.7 |
| 8 | வில்லங்க சான்று | இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்டது | வா.த.சா.ஆ.8 |
| 9 | கடந்த 09.01.2021 தேதியிட்ட பதிவு செய்யப்படாத உயில் ஆவணம் | அசல் | வா.த.சா.ஆ.9 |
| 10 | கடந்த 05.07.2004 தேதியிட்ட பிச்சாண்டி பெயரில் உள்ள கிரய பத்திரம் | சான்றிட்ட நகல் | வா.த.சா.ஆ.10 |
| 11 | கடந்த 05.07.2004 தேதியிட்ட பீமன் பெயரில் உள்ள கிரய பத்திரம் | சான்றிட்ட நகல் | வா.த.சா.ஆ.11 |
| 12 | கடந்த 08.03.2011 தேதியிட்ட பாலு பெயரில் உள்ள கிரய பத்திரம் | சான்றிட்ட நகல் | வா.த.சா.ஆ.12 |

மேற்கண்ட வா.த.**சா.ஆ.9,10,11** வரையிலான ஆவணங்கள் மற்றும் சான்றிட்ட ஆவணங்கள் ஆகியவற்றின் மீது பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்ய கடும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. மேற்கண்ட ஆவணங்கள் தொடர்புடையதா, இல்லையா என தற்பொழுது தீர்மானிக்ககூடியதல்ல. இருப்பினும் ஆட்சேபணையுடன் மேற்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யபடுகின்றன.

1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–

1. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எல்லாம் தெரியுமா என்றால் தெரியும். எனது தகப்பனாரின் சகோதரர்தான் முனுசாமி என்பதை நிரூபிப்பதற்கு நான் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தகப்பனாரும், முனுசாமி என்பவரும் மலேசியாவில் வாழ்ந்து வந்தார்கள் என்பதை நிரூபிப்பதற்கு நான் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இதுவரை தாக்கல் செய்யவில்லை. ஆனால் கையில் உள்ளது.

2. எனது தகப்பனாரும், முனுசாமி என்பவரும் சேர்ந்து மலேசியாவிலும், இந்தியாவிலும், என்னென்ன சொத்து வாங்கினார் என்றால் வீடு, ரப்பர் தோட்டம் வாங்கினார்கள். வீடு, ரப்பர் தோட்டம் வாங்கியதாக நான் சொல்லும் நிலையில், அதற்கான சர்வே எண். விஸ்தீரணம் மற்றும் யாரிடமிருந்து வாங்கபப்ட்டது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். மலேசியாவில் வாங்கிய சொத்து என்ன என்று தெரியாது என்றால் சரியல்ல. என்ன சொத்து வாங்கினார்கள் என்று தெரியும். யார் பெயரில் சொத்து வாங்கப்பட்டது என்றால் அனைத்தும் எனது பெரியப்பா பெயரில் வாங்கப்பட்டது.

3. இந்தியாவில் என்னென்ன சொத்து வாங்கினார்கள் என்றால் நிலம், வீடு வாங்கினார்கள். இந்தியாவில் வாங்கியதாக சொல்லப்படும், நிலம், வீடு ஆகியவற்றின் சர்வே.எண். விஸ்தீரணம், யாரிடமிருந்து கிரயம் பெறப்பட்டது என்ற விவரம் தெரியாது என்றால் சரியல்ல தெரியும். நாகராஜராவ் என்பவரிடமிருந்து 4 ஏக் சொத்து வாங்கப்பட்டது. அதன் சர்வே. எண்.116, 114/1, 114/2, 112 ல் ஒரு காலி மனை ஆகும்.

4. மேற்சொன்ன சொத்துக்களை எந்த தேதியில் வாங்கப்பட்டது என்றால் சர்வே. எண்.116 ல் உள்ள சொத்து கடந்த 1956 ம் ஆண்டு வாங்கப்பட்டது. சர்வே. எண்.114/1 ல் உள்ள சொத்து கடந்த 22.03.1960 ம் ஆண்டு வாங்கப்பட்டது. சர்வே. எண்.114/2 ல் உள்ள சொத்து கடந்த 1959 ம் ஆண்டு வாங்கப்பட்டது. சர்வே எண்.112 ல் உள்ள 12 செண்ட் காலி மனை 1956 ல் வாங்கப்பட்டது.

குறுக்கு விசாரணை:–

**ஆவணங்கள் பரிசிலீக்கவேண்டி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கவேண்டப்பட்டது. வேண்டுகோள் ஏற்கப்பட்டு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

முடிவு நேரம் 03.30 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.